பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

16 07 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் அடுத்த வாரம் தொடங்கவுள்ள நிலையில், அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

- ஈரானுக்கு தேவையின்றி பயணங்கள் மேற்கொள்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும் என்று இந்திய தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

- தமிழகத்தில் இளங்கலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்பு சேர்க்கைக்கான கலந்தாய்வு வரும் 30-ஆம் தேதி தொடங்கும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

- ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்படும் என்ற அமெரிக்காவின் அச்சுறுத்தலை நிராகரிப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

- ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<<>>>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் அடுத்த வாரம் தொடங்கவுள்ள நிலையில், அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.
வரும் 20-ஆம் தேதியன்று நடைபெறும் இக்கூட்டத்தில், நாடாளுமன்ற இரு அவைகளும் சுமூகமாக இயங்குவதை உறுதிபடுத்தும் வகையில் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் மத்திய அரசு ஒத்துழைப்பை கோர உள்ளது.

மழைக்கால கூட்டத்தொடர் இம்மாதம் 21-ஆம் தேதிமுதல், அடுத்த மாதம் 21-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தொடரில், பல்வேறு முக்கிய மசோதாக்கள் மீதான விவாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<>>>>>

வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு பபித்ரா மார்கரெட்டா வரும் 18-ஆம் தேதி முதல், 25-ஆம் தேதிவரை ஆப்பிரிக்க நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள இருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள **‘Eswatini, Lesotho,** மற்றும் தென்னாப்பிரிக்க நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் அவர், அந்நாடுகள் உடனான இந்தியாவின் நட்புறவை வலுப்படுத்தும் வகையில் பல்வேறு பேச்சுக்களை மேற்கொள்ள இருப்பதாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

ஈரானுக்கு தேவையின்றி பயணங்கள் மேற்கொள்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும் என்று இந்திய தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, ஈரானில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தற்போது ஈரான் நாட்டில் நிலவும் சூழலை கருத்தில்கொண்டு, இந்தியர்கள் தங்கள் பயணங்களை கவனமாக மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

தொடர்ந்து அங்குள்ள சூழல் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், இந்திய அதிகாரிகள் வெளியிட்டுள்ள ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும் என்றும் தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஈரானில் வசிக்கும் இந்தியர்கள் நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

இலங்கையை சேர்ந்த இளம் அரசியல் கட்சி குழுவினர் புதுதில்லியில் இன்று வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரியை சந்தித்து பேசினர்.

இந்த சந்திப்பின்போது இந்தியா - இலங்கை நட்புறவை மேலும் வலுப்படுத்துவதில் இளம் தலைவர்களின் பங்களிப்பு அவசியம் என்று திரு விக்ரம் மிஸ்ரி, அக்குழுவினரிடம் வலியுறுத்தினார்.

அந்நாட்டின் 14 அரசியல் கட்சிகளை சேர்ந்த 24 உறுப்பினர்கள் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் பங்கேற்கும் இரண்டுவார கால பயிலரங்கம் இன்று தொடங்கியது.

<<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாகிஸ்தான் பயன்படுத்திய வெடிப்பொருட்கள் தாங்கிய ட்ரோன்களை இந்திய ராணுவம் வெற்றிகரமாக முறியடித்ததாக ராணுவ தலைமை தளபதி ஜெனரல் அனில் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ட்ரோன் தாக்குதலை முன்கூட்டியே கண்டறியும் வான் அமைப்பு தொடர்பான கருத்தரங்கில் அவர் பங்கேற்று பேசினார்.

பாகிஸ்தானின் ட்ரோன்கள் இந்திய ராணுவத்திற்கோ, மக்கள் குடியிருப்புக்கோ எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தவில்லை என்று அவர் கூறினார்.

ட்ரோன் தாக்குதலை முன்கூட்டியே கண்டறியும் வான் கண்காணிப்பு அமைப்பை உள்நாட்டிலேயே உருவாக்க வேண்டியது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

இதுபோன்ற தொழில்நுட்பங்களுக்காக வெளிநாடுகளை சார்ந்திருப்பது போருக்கான ஆயத்தத்தை தாமதப்படுத்தும் என்றும், அதனை தவிர்க்க இதுபோன்ற தொழில்நுட்ப முன்னேற்றங்களை உள்நாட்டிலேயே கட்டமைப்பதற்கான முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜெனரல் அனில் சௌகான் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

செயற்கை நுண்ணறிவு ஊக்குவிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

நாட்டில் சுகாதாரம், கல்வி, வேளாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவின் பங்களிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், அதனை ஊக்குவிக்கும் வகையிலும் இத்தினம் பின்பற்றப்படுகிறது.

இதையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலம் **'Bokaro '**மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினருக்கும், நக்சலைட்டுகளுக்கும் நடைபெற்ற மோதலில் இரண்டு நக்சலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

இந்த மோதலில் பாதுகாப்புப்படை வீரர் ஒருவர் வீரமரணமடைந்தார்.

அங்குள்ள **Kashitand** வனப்பகுதியில் இந்த மோதல் நடைபெற்றதாகவும், இதில் 25 லட்சம் ரூபாய் பரிசு அறிவிக்கப்பட்ட நக்சலைட் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் இளங்கலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்பு சேர்க்கைக்கான கலந்தாய்வு வரும் 30-ஆம் தேதி தொடங்கும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சன்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், போலிச்சான்றிதழ் பயன்படுத்தி விண்ணப்பித்தவர்கள் தகுதிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

***(Voice Byte - மா. சுப்பிரமணியன் - 44 Sec.)***

<<<<<<>>>>>

பங்களாதேஷில் பிரபல திரைப்பட இயக்குநர் சத்யஜித்ரேயின் பூர்வீக இல்லத்தை இடிப்பதென்ற முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு அந்நாட்டு அரசை இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க சத்யஜித்ரே குடும்பத்தினர் வசித்த இந்த வீடு, வங்கக் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாக திகழ்வதுடன் ஒரு பாரம்பரிய கட்டிடம் என்பதால் அதனை பாதுகாக்க உதவுமாறு வெளியுறவு அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

மேற்கு வங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜியும் இதே கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்

<<<<<<>>>>>

ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்படும் என்ற அமெரிக்காவின் அச்சுறுத்தலை நிராகரிப்பதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு **Sergey Lavrov** தெரிவித்துள்ளார்.

சீனாவின் **Tianjin-**ல் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிதாக விதிக்கப்படும் தடைகளை எதிர்கொள்ள ரஷ்யா தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

கடந்த காலத்தில் இதுபோன்ற எண்ணற்ற தடைகளை அந்நாடு கடந்து வந்திருப்பதாகவும் திரு **Sergey Lavrov** குறிப்பிட்டார்.

முன்னதாக, யுக்ரைன் நாட்டுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தை 50 நாட்களுக்குள் ரஷ்யா மேற்கொள்ளாவிட்டால் அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

<<<<<<>>>>>

ஜம்மு-கஷ்மீரின் பகவதி நகர் முகாமில் இருந்து மேலும் 6 ஆயிரத்து 64 யாத்ரீகர்கள் இன்று அமர்நாத் புனித யாத்திரை புறப்பட்டுச் சென்றனர்.

அங்கு சீரற்ற வானிலை நிலவும் சூழலில், ஆயிரக்கணக்கான பக்தர்கள் தொடர்ந்து யாத்திரையை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுவரை 2 லட்சத்து 34 ஆயிரம் பேர் இந்த யாத்திரையை மேற்கொண்டிருப்பதாக அவர் மேலும் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

ஐ.நா. அமைதிப்படை வீரர்கள் மீது தாக்குதல் நடத்துவோரை நீதியின் முன் நிறுத்துவதற்கான செயல்திட்டம் அவசியம் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐ நா உயர்நிலைக்கூட்டம் ஒன்றில் அந்த அமைப்பிற்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு ஹரீஷ் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், ஆபத்தான பகுதிகளில் பணியாற்றும் அப்படையினர் கடுமையான அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாகவும், அவர்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோர் பெரும்பாலும் தண்டிக்கப்படுவதில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-11, 21-18 என்ற செட் கணக்கில, சீனாவின் **Zheng Xing Wang**-ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ரங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை 21-18, 21-10 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Min Kang – Dong Ju Ki** இணையை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-----------

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஆரியன்ஷா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

----------

**Beckenham**-ல் நடைபெற்ற இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 19 வயதுக்கு உட்பட்டோருக்கான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டிரா ஆனது.

---------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

சவுத்தாம்டனில் இப்போட்டி மாலை மணி 5.30-க்கு தொடங்குகிறது.

-------------

உலக அளவிலான பல்கலைக்கழக மகளிர் கைப்பந்து சாம்பியன் போட்டி இன்று ஜெர்மனியில் தொடங்குகிறது.

முதல் போட்டியில் இந்தியா - பிரேசிலை எதிர்கொள்கிறது.

<<<<<<END>>>>>